T-UN-466

ஸ்ரீ

ஆண்டாள் துணை

# கஜேந்திரமோக்ஷ கவி



இஃது

ஸ்ரீவில்லிபுத்தூர் கஸ்பா கம்மாப்பட்டி

யிலிருக்கும்

அருணைகிரிநாடார் குமாரர்

தெய்வசிகாமணிநாடாரால்இயற்றியது

ஸ்ரீவில்லிபுத்தூர் கோதாவிலாசப்பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது

1913

## சாற்றுக்கவி.

மகா-ள-ள-ஸ்ரீ சொக்கம்பட்டி மாஜி சின்னஜமீன்தார் குலசேகர சின்னணஞ்சத்தேவரவர்கள் குமாரர் ராஜகோபால சின்னணஞ்சத்தேவரவர்களியற்றியது.

### வெண்பா.

தெய்வசிகாமணிதான் செப்பியயானைக்கவிக்கித்
தெய்வமுங்கூடச்சிரமசைக்கும் இப்புவியில்
மெய்ப்புலவோரெல்லாம் வியந்துரைக்குஞ் சித்ரகவி
ஒப்புவமையில்லையெனவோது

ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டைப்புரம் மகா-ள-ள-ஸ்ரீ ஆறுமுகஞ்செட்டியாரவர்கள் குமாரர் உபாத்தியாயர் வேலாயுதஞ்செட்டியாரவர்களால் இயற்றியது

கோகனகமாது வளர்வில்லி நகரதனிலுறை கோதையாண்டாட்
காகனகநேரெனமுன்வாய்ந்தகவி மாய்ந்தகவியன்பாய்ச்சொன்னான்
நாகனகராதியர்களோதுபுகழருணைகிரி நாதனீன்ற
பாகனகநிதியுடையான் மதியுடையான் றெய்வசிகாமணி யென்போனே

ஸ்ரீவில்லிபுத்தூர் ஜவுளிக்கடை செ. மீராஉசேன் ராவுத்தரவர்களியற்றியது

மெய்வசிகாமணியணியும் பாமனருள்புதல்வவெனுமேலோர்க்கென்றுங் ௨
கைவசிகாமணி மயிலோய்கானவளிகணவனெனக்கசிந்துபாடுந்
தெய்வசிகாமணிக் கவிஞன் செப்பிய யானைப்பதிகஞ் சிறப்பச்செய்த
சைவசிகாமணிப்புலவர் தரையினிழிந்திமைப்பிலராய்த்தான் கண்டாரே

காப்பு வெண்பா.

பூக்களிலே, கோகனக,ப்பூப்போற், பொலிமந் த
மாக்களிலே,யாண்டாள், மதயானை-மோக்கமுற் ற

சரமகவிப் பாவுரைக்க, த்தருவான் கருணை ப்
பரமன், மகனேரம்பன்

மணிமருவுசதபத்தலங்காரசிரசுடிகைமாசுணந்தாங்குமகியா
மாதுக்கொர்திலதமெனுவில்லிமாநகருய்யவருகோதை நாச்சியாண்டாள்
அணிமருவுகோவிற்கலங்காரவுருமாயற்புதக்காட்சியான
ஆம்பலின்றலைவனேயரசாணைமனமுட்குமழகனேயபனுனவன்
துணிவினொடுகொல்லமாண்டாயிரத்தெண்பத்தோரெட்டுபரிதாவியாண்டில்
சொல்லுமதிமாசியாருந்தெய்தியாதிரை சோமவாரத்தினன்று
கணிதமுறு பூர்வமேகாதசியின் மீனமுன் காலமுடிவாக்கினனே
கம்பீரடமபசிங்காரவுல்லாசமாதங்கமே கரிகளரசே. (1)

நாகமே மூன்றுநாள் பாகலப்பிணியினால் நமஜன்னியுனைவருத்த
நகரவாசிகளுற்ற சோகத்தை யெந்தவொரு நாவாலுரைக்கவெளிதோ
நாகமோடேதந்தமர்க்குற்றநோயெனச்சற்றேனுமகலாமலே

தனையரொடுதாரமுங்ஈணவருஞ்சுற்றியேதள்ளரும்பெருங்கூட்டமாய்ப்
பாகமீதுறையுற்றதேவகங்காதராபதுமலட்சுமிசமேதா
பதுமாபகட்டினுக்கருள்புரியெனத்தங்கள்பாடொன்று நோக்கிடாமல்
சாகமேகரைதல்போற்கண்ணினீர்சொரியவக்கரியமால்பதமுற்றையோ
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமே கரிகளரசே (2)

நதிசரம் கிரிசரம் வனசரமெனப்புலவர் நவிலுவார் மூன்றுவிதமா
நானவ்வினததஜேநகசரமெனப்புலவர் நாடுற்ற ராஜஉகயமே
மதியிற்சிறந்த வாரணமேயிபங்கமனைறுரென்றுவையகத்தோர்
வாயாரவாழ்த்திடுந்திருநாமதேயனேவரவரக்கலியென்பவன்
அதிகமாயுலகத்துலாவலையறிந்துகொலகத்தில்சகத்தாசைவிட்
டரியன்பின்மெய்த்தொண்டர்தம்மொடைக்கியமாகியானந்தவைகுந்தமாங்
கதியினிற்புக்குளாயினியென்றுகாண்குவோங்கரிணியேகளபேந்திரா
கம்பிரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (3(

மாகத்தில்மழைபொழியவெழுகரியமேகத்துவருசெக்கர்வானமதனை
வாரித்தெளித்தங்கிலங்கிடுவதென்னவேவளர்கருநிறம்பொலிந்த
ஆகத்திலொளிர்கின்றசெந்தேமலமுகையுமார்ந்தகருணைப்பார்வையும்
அண்டையிற்பெரியருஞ்சேயனுகிநிற்பினும்மாதரிக்கின்றகுணமும்
போகமுறுசிற்றுண்டிசிறியவருமீந்துட்டன்போல் ரங்கமன்னரெனில்
பூரிப்போடேசலாஞ்செய்துசந்துர்ஸ்ட்டிதான்புகல்கின்றவிதமாசவே
சாகுளிதெரித்தலுங்கள்வர்மறைத்துநீக்கியமால்பதமுற்றைமேயோ
கம்பீரடம்பசிங்காரவல்லாசமாதங்கமேகரிகளரசே (4)

கனகந்தெளித்ததொருகரியமலைகாத்திரக்கால்முதல்பெற்றதனையாய்
கவின்றருமுதுகினிற்பட்டினைவிரித்தோசைகாட்டுமணிபக்கமதிரச்
சினமற்றவதனத்துமுகபடமிலங்கிடச்செய்யகிம்புரிக்கோட்டுடன்
திரிலோகமீதினும்மிகரிலம்பாரியைச்செழுமஞ்சமீதுதாங்கி
கன்மாங்கழுத்திட்டமணிமாலையிரவுங்கௌரமதாய்நடக்க
கண்டவர்களையாவரும்வேண்டுமேயாயிரங்கண்ணழகுகாணவென்று

கனிதலுறவில்விகள் வீதிநிறைகோலநீகாட்டவென்றைக்கு வருவாய்
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே 5.

திசையானைபெட்டுப்பரவைசூழ்மண்டலஞ்சிதையாதிருப்பதற்கே
செப்பினர்பிடர்கொடுத்தேந்திநின்றதுவெனத்தெரியாதசிலர்கம்பீரா
நிசிசரனிராவணன் மாரபினுறமுட்டவே நீண்மருப்பிற்றபடியால்
நெஞ்சத்துவெட்கியேசென்றொளித்தனவெனநிகழ்த்தினர் நேர்மையாமோ
அசைவறுமதாவளந்திக்குற்றதுஞ்சேணிலயிராவதம்புக்கதும்
ஆமப்பின குலமெலாங்கானகத்தெய்தியயங்கொளித்திட்டவிதமும்
கசிவுறபிருட்டியார்க்குன்வரவுகண்டலோகைப்புலியினத்தினிறையே
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (6)

பாரதம்பன்னிரண்டாகாளுயுத்தமப்பகதத்தனேறுபகடைப்
பகரலாமுனைறனக்கிணையாகவென்னிலோபார்த்தனலைதுமாண்டதே
சீராமசரிதத்துமத்தனார் சிந்துரஞ்செப்பலாமென்னிலதுவுந்

திபுத்திரகீலனுலாபத்து சேர்ந்துடன் சிரமற்றுவிழலானதே
பாரதனிலுனையொக்கவேறெத்தையோதுவேன் பகரிலிணைநீயுனக்கே
பார்த்தவர்கள்யாவரும் பசியினைமறதிடப்பண்ணுமழகானகளிறே
கார்தவளுமாடியுறுவில்லிநகர்விட்டுநீ கரியமால்புரமுற்றயோ
கம்பீரடம் சிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (7)

வேதகோஷ்டஞ்செய்யும் விப்பிரர்சிறந்திடும்வில்லிநகர்தன்னைமேலோர்
விண்ணுலகுபுக்குறவமைத்தபடியாமெனவிளங்கிடுஞ்சிகரியாலும்
பூதலத்தரசிக்கலங்காரமகுடமாய்புகலுமிரதத்தினாலும்
பூதரமிதாமெனப்பொலியுமுன்னாலுமேபுகலுவார் மேலதாக
மாதவர்களும்புவனவாசியர்களும் பரவுமங்கைசீதேவியாண்டாள்
மஞ்சனகுடங்கொண்டலங்காரமாய்வீதிவருகின்ற மந்தமாவே
காதலாய்வைகுந்தகர்த்தாவுனைத்தனதுகடமைக்கழைத்தான்கொலோ
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (8)

இன்னகரத்திலுள வேளத்தையிங்கிதற்கிணை சொல்லலாகுமெனிலோ
யிவ்விதக்குற்றமுண்டன்ன தற்காகையாலிணை யிதற்கில்லையெனவே
பனுவலருளைக்கண்ட பண்டிதாள் பாமரான பாவையருடன்பாலரும்
பகர்ந்திடினுமொக்குமோ நாமமென்றுதலாற் பாலினைக்கள்ளுமதுபோல்
நனையமிகுந்த கால்வாய்களைத்தணைகோடி நண்ணினுமுனக்குநிகரோ
நபமீதிலெண்ணரியமீனுதித்திடினுமொருநன்மதியங்காகுமோ (யோ
கன்னியர்கள் முனைனர்கறுவெண்ணையுண்டாடியருள் கண்ணனிட நண்ணினு ம
கம்பீரடம்பசிங்காரவல்லாசமாதங்கமேகரிகவரசே (9)

## திருமாலுக்கும் யானைக்கும் சிலேடை.

போர்க்கரியெனப்புகலுமார்க்கத்தினுலுலகர் புகழுந்துதிக்கைபெறலால்
புனிதமுறுகோடுகொண்டமையினலழகான புள்ளிமேனுற்றபடியால்
பார்க்கண்மதத்தாரைவீட்டுகையினுலெழிற்பருமுரசினடிகொண்டதால்
பன்னகங்கொள்ளலாலேவரைச்சேர்தலால் பாகுக்கிணங்கியுறலால்

ஆரணத்துருவமாய் முழுமுதற்பொருளானவாண்டவனை நீயுமொத்தாய்
அகிலத்து விகாற்றலங்காரவுருவுற்ற ஆம்..லுக்கொருதிலகமே
கா..ற்றமேனிவிரி நேமியம்பாணிபக்கரியமால்பதமுற்றையோ
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (10)

## பரமசிவனுக்கும் யானைக்கும் சிலேடை.

அஞ்சக்கரங்கொள்ளலாலவனிபோற்றவேயம்பாரிகொள்ளுகையினால்
அந்தரத்தும்புவனவாசியருமறியவேயாடரவமணிபூணலால்
மஞ்சானமால்கொண்டிருத்தலாலினிதாக மானிடந்தாங்குகையினால்
மாறின்றியேகளங்கறத்திட்டபான்மையால் வருகாலுரங்கொண்டதால்
நெஞ்சத்திலுன்னியேகைபரவிநிற்றலால் நெற்றிக்கண்ணுமமுறலால்
நேரக்கபாலமதெடுத்ததுவரலாலுநீ நிசதனையுமொத்திகண்டாய்
கஞ்சத்தனைப்பொருவில்காமனையுமே பெற்றகண்ணனிடநண்ணினுயோ
கம்பீரடம்பசிங்காரவுல்லாசமாதங்கமேகரிகளரசே (11)

ஆதிவில்கரவாயகப்பட்டதும்பிதாஆதிமூலாவென்னவே
யதன்வாயிருந்துன்குலகதானை மீட்டுளோனச்சுதனெனத்தெரிந்தும்
ஆகினால் மரணவன்மீன்வாயிலுற்றுநீ துடிதுடிக்கின்றபோதன்
சோகத்தைநீக்கிடத்துளவமாலிகையுற்றசோதியைத்துதிசெய்திடா
தேதினால் நீமறந்தாயிழுக்கிட்டநாளெவருக்கு நீக்கலரிதென்
றெண்ணிவிட்டாய்சொலோமர்மம்வேறுள்ளதோவின்னதென்றறியகில்லோம்
காதிலேகுழையாயர்வீதிவெண்ணெய்க்குறுங்கண்ணனிடநண்ணினையோ
சம்பிரடம்பசிங்காரவுல்லாசமாதெங்கமேகரிகளரசே, (12) ௬

சரமகவி முற்றுப்பெற்றது